**நாள். 14.02.2025**

**<u>CC No.26/2016</u>**

**வா.சா. 1**

**திரு. சக்தி**

த/பெ.வேடி

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**

**<u>குறுக்குவிசாரணை தொடர்ச்சி</u>**

1. என் தங்கை திருமணத்திற்கு முன்பிருந்தே பேச இயலாத நிலையில் உள்ளார் என்றால் சரிதான். அதற்காக இயலாமை சான்று பெறப்பட்டுள்ளதா என்றால் இல்லை. 2014ல் எனது தங்கை சார்பாக ஜீவனாம்சம் வழக்கு தாக்கல்செய்திருந்தேன் என்றால் சரிதான். மேற்படி ஜீவனாம்சம் வழக்கு 2014ல் முடிந்தது. ஜீவனாம்சம் வழக்கில் எனது தங்கை ஆஜராகவில்லை என்றால் சரிதான். எதிரிகளுக்கு எதிராக நாங்கள் கொடுத்த புகாரின்பேரில் இரண்டு குற்றவழக்குகள் நடந்துவந்தது என்றால் சரிதான். மேற்படி குற்ற வழக்குகள் இரண்டிலும் தவறாமல் ஆஜராகிவந்தார்கள் என்றால் சரியல்ல. மேற்படி ஜீவனாம்சம் வழக்கு மற்றும் குற்ற வழக்குகள் ஆகியவை ஒரே தேதியில் வழக்கு விசாரணை நடத்த மனு ஏதேனும் தாக்கல்செய்தேனா என்றால் இல்லை.

2. ஜீவனாம்சம் வழக்கில் ஒருதலைபட்ச உத்தரவு பெறும் நோக்கில் இந்த வழக்கின் எதிரி / ஜீவனாம்ச வழக்கில் எதிர்மனுதாரர்களுக்கு அழைப்பாணை சார்வானது போல் ஒப்புகையை தாக்கல்செய்து, எதிரிகளுக்கு எதிராக செயல்பட்டுவந்தேன் என்றால் சரியல்ல. மேற்படி குற்ற வழக்கானது 2014க்கு முன்பிருந்தே நடந்து, 2022ல் தீர்ப்புரை பகரப்பட்டது என்றால் சரிதான். அதற்கு பின்னிட்டு ஒரு வருடம் கழித்துதான் ஜீவனாம்ச தொகையை வசூலிக்கவேண்டி மே 2024ல் கு.வி.மு.ச பிரிவு 128ன்கீழ் மனு தாக்கல்செய்தேன் என்றால் சரிதான். 03.06.2009ல் காலை 09.00 மணிக்கு எனது தங்கைக்கு திருமணம் நடந்தது. திருமண ரசீதை ஊர்கவுண்டர் தான் கோவில் சார்பாக வழங்கினார். கோவிலுக்கு பூசாரி இல்லை, ஊர்கவுண்டர் தான் அனைத்து விசயங்களையும் பார்த்துகொள்வார்.

3. திருமணம் நடந்ததற்கு பின்னிட்டு மணமகன், மணமகள் ஆகியோர் கையொப்பம் செய்தார்கள் என்றால் சரிதான். ரசீதினை வழங்கியவர் என்ற இடத்தில் மந்திரிகவுண்டர் கையொப்பமிட்டுள்ளார். திருமணம் நடந்த தேதியில் தான் ரசீது வாங்கினார்கள். அன்றைய தினம் காலை 10.00 மணியளவில் வழங்கினார்கள். ரசீதுகளை 3, 4 பேர்கள் எழுதினார்கள். மணமகன் பெயர் விஜயன் என்று கண்டுள்ளது என்றால் சரிதான். ம.த.சா.ஆ.1ல் உள்ள மணமகன் என்ற இடத்தில் கையொப்பம் விஜயன் என்று கண்டுள்ளது என்றால் சரிதான். விஜயன் (எ) விஜயகுமார் இருவரும் ஒருவர் என்றால் சரிதான். அந்த ரசீதில் கோபால், சின்னராஜி ஆகியோர் கையொப்பம் செய்துள்ளார்கள். திருமண ரசீதின் அசலை நீதிமன்றத்தில் தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரிதான்.

4. திருமணம் நடப்பதற்கு முன்பாக தான் திருமணம் நடக்கபோகும் தேதியை அறிவித்து ரசீது பெறுவார்கள் என்றால் சரிதான். திருமண ரசீது இலவசமாக கொடுத்தார்கள். சாட்சி பின்னிட்டு திருமண ரசீது ரூ.501/– செலுத்தியதாக கூறுகிறார். ம.த.சா.ஆ.1ல் ஊர்கவுண்டர், மந்திரிகவுண்டர் யார் பெயரும் இல்லை என்றால் சரியல்ல. ம.த.சா.ஆ.1 ரசீது வழக்கிற்காக பின்னிட்டு தயார்செய்யப்பட்டது என்றால் சரியல்ல. திருமண பத்திரிக்கை எதுவும் அடிக்கவில்லை. ஊர்காரர்கள் திருமணத்திற்கு வந்தார்கள். மாதேஷ் என்பவர் வரவில்லை. மாதேஷ் என்பவருக்கும், எனது தங்கைக்கும் நடந்த திருமணத்தை ரத்துசெய்துவிட்டு மறுதிருமணம் செய்துவைத்தோம் என்றால் சரியல்ல.

5. எனது தங்கை சார்பாக நான் தாக்கல்செய்த ஜீவனாம்ச வசூல் மனுவில் 1வது எதிரி ஒரு நதியா என்ற பெண்ணை திருமணம்செய்து இரண்டு குழந்தைகள் உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. கு.வி.மு.ச 128ன்கீழ் தாக்கல்செய்யப்பட்ட மனுவானது காண்பிக்கப்பட்டு பத்தி 3ல் முதல் மனுதாரரை அனாதையாக விட்டுவிட்டு நதியாவை இரண்டாம் திருமணம்செய்து கொண்டு வாழ்ந்துவருவதாக மனுவில் குறிப்பிட்டுள்ளதாக சாட்சி ஒப்புகொள்கிறார். எனது தங்கையும், 1வது எதிரியும் ஒருவருடம் ஒன்றாக வாழ்ந்துவந்ததற்கான அடையாள அட்டை, குடும்ப அட்டை எதுவும் இல்லை. எனது குடும்பத்துடன் வாழ்ந்ததற்கான குடும்பஅட்டை தான் உள்ளது என்றால் சரிதான்.

6. திருமணத்திற்கு முன்பே 1வது எதிரி பெருமா என்பவருடன் தொடர்பு வைத்துகொண்டார் என்றால் சரிதான். திருமணத்திற்கு முன்பு எத்தனை வருடம் தொடர்பு வைத்திருந்தார் என்றால், திருமணத்திற்கு பின்பு தான் தொடர்பு வைத்திருந்ததாக சாட்சி கூறுகிறார். திருமணத்திற்கு பிறகு எத்தனை நாள் கழித்து பெருமாவுடன் தொடர்பு வைத்திருந்தது பற்றி தெரியவந்தது என்றால், அதுபற்றி என்னால் குறிப்பாக சொல்லமுடியாது. அப்படியானால் திருமணத்திற்கு முன்பே 1வது எதிரி வேறு ஒரு பெண்ணுடன் தொடர்பு வைத்திருந்ததாக கூறுவது தவறு என்றால் சரியல்ல. இது சம்மந்தமாக போலிசில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் ஆமாம். அது சம்மந்தமாக ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான்.

7. எனது தங்கைக்கும், 1வது எதிரிக்கும் குழந்தைகள் எதுவும் பிறக்கவில்லை. ஒருவருடம் கழித்து எனது தங்கையை புறக்கணித்த நிலையில், எனது தங்கையை 1வது எதிரியுடன் சேர்த்துவைக்க மாரியப்பன் மற்றும் ஊர்கவுண்டர் முன்னிலையில் சேர்ந்துவாழ சொல்லி பொது இடத்தில் வைத்து பேசினோம். அவர் பஞ்சாயத்திற்கு கட்டுபடவில்லை. அதனால் பாப்பாரப்பட்டி காவல் நிலையத்தில் அடுத்த நாள் புகார்கொடுத்தோம். அதன் பேரில் அவர்மீது வழக்கு தொடர்ந்தார்கள்.

8. பஞ்சாயத்து பேசி எழுதிய முச்சலிக்காவை நீதிமன்றத்தில் தாக்கல்செய்துள்ளேன் என்றால் ஆமாம். பஞ்சாயத்து முச்சலிக்கா எழுதப்பட்ட தேதி நினைவு இல்லை. எனது ஊரிலிருந்து 4 கி.மீ பழனிஆண்டவர் கோவில் உள்ளது. அந்த கோவிலின் பூசாரி பெயர் தெரியாது. அந்த கோவிலில் திருமணத்திற்கு ரசீது கொடுப்பார்களா என்றால், எனக்கு தெரியாது. விஜயகுமார், பெருமா ஆகியோருக்கு திருமணம் நடந்தது தொடர்பாக எதுவும் ஆவணங்களை பார்த்தேனா என்றால் இல்லை. பழனிஆண்டவர் கோவிலில் திருமணம் செய்ய ஏற்பாடு ஆனதை பற்றி டீக்கடையில் பேசிகொண்டிருந்தார்கள்.

9. பழனிசாமி த/பெ. சம்பேரி என்பவர் தான் டீக்கடையில் வைத்து சொன்னார். அன்றைய தினம் காலை 07.00 மணியளவில் டீக்கடை போனேன். 12.05.2016ம் தேதி டீக்கடை போனேன். அன்றைக்கு என்ன கிழமை என்பது தெரியாது. அந்த நாள் முகூர்த்த நாளா என்பது தெரியாது.

**(சாட்சி வழக்கு விசாரணைக்கு ஒத்துழைக்காமல் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு சாட்சி குதர்க்கமாக பதில் அளித்ததால் குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)**